

தமிழ்நாடு சட்டப்பேரவை 2024–2025 ஆம் ஆண்டிற்கான பொது கணக்குக் குழு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டு பார்வையிட்டு பொதுமக்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றிட பொது கணக்குக் குழு உறுதுணையாக இருந்திடும் என பொதுக்கணக்கு குழு தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்தார். இக்கூட்டத்தில் பொதுக் கணக்கு குழு உறுப்பினர்கள் இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் சட்டமன்ற உறுப்பினர், ஜெ.முகம்மது ஷாநாவாஸ். சட்டமன்ற உறுப்பினர் நாகப்பட்டினம், அக்ரி கிருஷ்ணமூர்த்தி. (சட்டமன்ற உறுப்பினர் போலூர், சி.வி.எம்.பி.எழிலரசன் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சிபுரம், எஸ்.சந்திரன் சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி, ஆர்.டி.சேகர், சட்டமன்ற உறுப்பினர் பெரம்பூர்), பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) வீர் பிரதாப் சிங், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜுலு, மாவட்ட வன உயிரின காப்பாளர் டாக்டர்.இரா.முருகன், பரமக்குடி சார் ஆட்சியர் .அபிலாஷா கௌர், இணைச்செயலாளர் ரேவதி, மாவட்ட வன அலுவலர் ஹேமலதா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி நேற்று (27.01.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் 2024–25ஆம் ஆண்டில் பதிவு செய்த அன்றே அனைத்து ஆவணங்களையும் (100%) உரிய நபர்களுக்கு திரும்ப வழங்கி சிறப்பாக பணியாற்றிய ஏழு சார்பதிவாளர்களுக்கு வெள்ளி பதக்கங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள். வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் ஆகியோர் உடனிருந்தனர்.

### நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## ஏ.கே.எஸ்.விஜயன் – டி.பி.எம்.மைதீன்கான் – மு.அப்துல்வகாப் – சு.சுப்பிரமணியன்– தருமபுரி அதியமான் – உடன்குடி தனபால் சிறப்புரை!

நெல்லை.ஜன.28.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக் கூட்டம் நெல்லை பேட்டை மல்லிமால் தெருவில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கல்லூர் ச. பாலசுப்பிரமணியன் தலைமையில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ரம்ஜான் அலி,ஆறுமுகராஜா,வினோத் அஸ்வின் பேபி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், தலைமை கழக பேச்சாளர்கள் தர்மபுரி அதியமான்,உடன்குடி தனபால் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

நிகழ்வில் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் பேசியதாவது.

10 ஆண்டுகளுகளாக ஒன்றிய அரசு ஹிந்தியை திணிக்க முயற்சி செய்ததை தி.மு.க.மட்டுமே எதிர்த்தது.எழுத்துருவே இல்லாத சமஸ்கிருதத்தை தூக்கி பிடிக்கும் கயவர்களுக்கு மத்தியில் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்று தந்தவர் கலைஞர் அவர்கள்.இந்தியாவின் பொதுத்துறை நிறுவனமான எல்.ஐ.சி.யின் வலைதளபக்கம் ஹிந்தியில் மாற்றியதற்கு எதிர்த்தவர் இந்தியாவின் ஒரே முதல்வர் என்ற பெருமைக்குறிய வர் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின். அவர்கள்.அரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் கனிமம் எடுக்க ஒன்றிய அரசு உத்தரவிட்டது.ஆனால் அதனை வர விட மாட்டோம் என சட்டமன்றத்தில் உறுதியாக இருந்தார் முதல்வர் அவர்கள்.இப்பொழுது வெற்றியும் கண்டுள்ளார்.ஆனால் அந்த வெற்றிக்கு யார் யாரோ உரிமை கொண்டாடி வருகின்றனர்.சொன்னதை செய்வோம் என்ற தாரக மந்திரத்தோடு முதல்வர் அவர்கள் செயலாற்றி வருகிறார்.

ஒன்றியத்தில் மோசமான ஆட்சியை நடத்தி வரும் மோடி இந்தியாவின் நம்பர் 1 முதல்வர் திராவிட மாடல் ஆட்சி செய்யும் தமிழகத்திற்கு தேவையான எந்த நிதியையும் தராமல் இருந்து வருகிறார். வக்பு வாரிய சட்டத்தை தவறான சட்டம் என எதிர்த்து குரல் கொடுத்த 10 எம்.பிக்களை சஸ்பெண்ட் செய்து விட்டனர்.நியாயமாக நடந்து கொள்ளும் பாராளுமன்ற கூட்டு குழு தலைவர் ஜகதாம்பிகாபாலையும் நியாயமாக நடக்க விடாமல் மோடி செய்துவிட்டார்.வக்பு வாரிய சட்டத்தின் பிரச்சினை தொடர்பான அழுத்ததை குறைக்க 10 எம்.பி.க்களை சஸ்பெண்ட் செய்ய வைத்து மோடி மோசமான செயலை செய்து வருகிறார். மக்களுக்கான நல்ல திட்டங்ங்களை செயல்படுத்தும் நம் முதல்வரின் செயலை பொறுக்காமல் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி லபோதிபோ என அடித்துகொண்டு எதேதோ புலம்பி வருகிறார்.தமிழகத்தின் பெண்கள் தி.மு.க.விற்கு ஆதரவாக செயல்பட்டு வருவதை எடப்பாடி பழனிச்சாமியால் பொறுக்கமுடியவில்லை.

தமிழகத்தில் ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு ரூபாய் 50 ஆயிரம் மறைமுகமாக தமிழக முதல்வர் அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே இது போன்ற திட்டங்களை எந்த மாநிலத்தின் அரசும் செய்யவில்லை.தமிழகத்தின் குடும்ப வருமானம் சராசரியாக ரூபாய் 60 ஆயிரமாக மாறியுள்ளது.காலை உணவு திட்டத்தின் மூல தமிழகத்தில் உள்ள 17 லட்சத்து 53 ஆயிரம் குழந்தைகள் வயிறார தமிழக முதல்வர் கொடுத்து வருகிறார்கள். தமிழக குழந்தைகளுக்கு வயிறார உணவு அளித்து பள்ளிக்கு வர வைத்தால் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க ஒன்றிய அரசு நிதியை கொடுக்காமல் தடுத்து வைத்துள்ளது. இதனையும் தமிழக அரசு தான் செய்து வருகிறது.இந்த நிலையில் தான் தமிழக அரசை பார்த்து அதிக கடன் வாங்கியதாக எடப்பாடி செல்லி வருகிறார்.

அ.தி.மு.க.ஆட்சியில் வாங்கிய கடனை விட தி.மு.க.ஆட்சியில் குறைவாக தான் கடன் வாங்கியுள்ளனர்.நிதி இல்லை, ஒன்றிய அரசின் நெருக்கடி போன்ற பல்வேறு பிரச்சினை இருந்தாலும் மக்களுக்காக அறிவித்த திட்டங்களை முதல்வர் நிறைவேற்றி வருகிறார்கள். ரேஷன் பொருட்களையும் வீடு தேடி கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்த முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை நடத்தி வருகிறார்கள். நிதி நெருக்கடியின் காரணமாகவே அந்த திட்டம் செயல்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.முதலமைச்சர் அவர்களிடம் பணம் மட்டும் இருந்து விட்டால் மக்களுக்கான அனைத்து திட்டங்களையும் சிறப்பாக செய்து விடுவார்கள்.நடிகர் விஜயைவிட அதிகமான தகுதிபடைத்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.சினிமாவில் நடித்தால் அனைவருக்கும் கூட்டம் கூடும்.அரசியல் என்பது தெரிந்தவர்களால் செய்யக் கூடியது. பேசினால் மட்டும் ஒன்றும் நடந்துவிடாது.சீமான் எல்லாம் மனிதனே கிடையாது.தைரியமாக சீமான் பேசுவதற்கு காரணமே தந்தை பெரியார் தான் என்பதை மறந்துவிட கூடாது.ஜனநாயக ரீதியில் ஆட்சி நடத்தும் முதல்வர் என்பதால் சீமான் பேச்சை கேட்டு அமைதியாக இருக்கிறார்.இதே வேறு மாநிலம் வேறு முதல்வர் ஆட்சி செய்யும் மாநலத்தில் இதேபோல் சீமானால் பேசிவிடமுடியுமா என்பதை நினைத்து பார்க்கவேண்டும்.

இவ்வாறு ஏ.கே.எஸ்.விஜயன் பேசினார்.

நிகழ்வில் மாநில வர்த்தக அணி மாநில இணைச்செயலாளர் என். மாலைராஜா,மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்தியானந்த்,பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் ராஜவர்மன்,மாவட்ட அவைத்தலைவர் வி.கே.முருகன்,தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிப்பாண்டியன்,மாவட்ட துணைச் செயலாளர்கள் தர்மர், எஸ்.வி.சுரேஷ்,கிரிஜாகுமார்,மேயர் கோ.ராமகிருஷ்ணன் (எ) கிட்டு, அயலக அமீரக பொறுப்பாளர் துபாய் மீரான், துணை மேயர் கே.ஆர்.ராஜு,முன்னாள் மேயர் சரவணன்,ஆதி திராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் நவநீதன், முன்னாள் மாவட்ட பொருளாளர் அருண்குமார்,மாநகரத் துணை செயலாளர் அப்துல் கையூம், மேலப்பாளையம் மண்டல சேர்மன் கதீஜா இக்லாம் பாசிலா, மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபாய் சாகுல் ஹமீது,தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன், பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை, மானூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மாரியப்பன்,கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள் மணி,மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் லி.முகமது இம்ரான், மைதீன்,மிக்கேல்,பேரூர் கழக செயலாளர் பேச்சிகுட்டி,மாவட்ட பிரதிநிதிகள் முகமது அலி,சுரேஷ், வேல்சாமி பாண்டியன்,சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் பல்க்குமார், வர்த்தக அணி மாவட்ட அமைப்பாளர் சேக் தாவூது,விவசாய தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் கருப்புசாமி செல்வம்,மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் தொப்பி மைதீன், விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் பொன்னையா பாண்டியன்,மகளிர் தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் அனிதா,இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் சின்னதுரை,வட்டக் கழக செயலாளர்கள் சேக்மன்சூர், வேல்முருகன்,புயல் மீனாட்சி,மலை கண்ணன்,ஆவின் கல்யாணி,செந்தில் முருகன்,லெனின்,மணிகண்டன், முத்துராமன்,மாரிமுத்து,மகளிர் தொண்டர் அணி மாவட்ட தலைவர் பத்மா,மகளிர் அணி மாநகர அமைப்பாளர் சௌந்தரம்,மகளிர் தொண்டரணி மாநகர அமைப்பாளர் மேரி,வட்டப் பிரதிநிதி பிந்து யாஸ்மின், மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன், ராஜேஸ்வரி,அல்லா பிச்சை, சகாய ஜுலியட் மேரி, மாவட்ட கவுன்சிலர் சத்தியவாணி முத்து,விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் வீரபாண்டியன், வர்த்தக அணி மாவட்ட துணை அமைப்பாளர் சீனிவாசன்,தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் பேட்டை மு.காதர்ஒலி,வர்த்தக அணி மாவட்ட தலைவர் அவதார் ஷாஜகான், வர்த்தக அணி மாவட்ட துணை தலைவர் பழக்கடை முத்துப்பாண்டி,விவசாய அணி மாவட்ட துணை அமைப்பாளர் கணபதி, அர்ஜுனபாண்டியன்,மகளிர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர் பூங்கனி,மகளிர் தொண்டர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜோதிப்பிரியா,தேவிகா,அருணா, மாநகர மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் ஹமிதா,சித்ரா பௌர்ணமி,சார்ளி,விவசாய தொழிலாளர் அணி மாணவர் அமைப்பாளர் செட்டி,தலைமை கழக பேச்சாளர்கள் இலக்கிய அணி மாவட்ட தலைவர்,நெல்லை ரவி,நெல்லை மணி,பிரிட்டோ அலெக்சாண்டர், திராவிட மணி,அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர் செல்வானந்த், விவசாய தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பழனி குமார், சிறுபான்மை நல உரிமை பிரிவு மாவட்ட துணை தலைவர் கே.கே.சேக் மைதீன், சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை தலைவர் முத்துசாமி,நெசவாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் சங்கரலிங்கம்,ரகுமான் ஷா,முன்னாள் வட்டக் கழகச் செயலாளர் டெல்லி சம்சு, தர்வேஸ் மைதீன்,சுஃபியானுள் முபாரக்,டி. பி.எம்.எம.முகமது ஷா, கண்ணன்,வட்ட பிரதிநிதி மணிகண்டன்,மாரியப்பன்,மாரி செல்வம்,பாலாஜி,பயாஸ்,சுபஹானி, அரஃபா அப்துல்,சித்திக்,இஸ்மாயில், மாணவரணி மாரி செல்வம், பாலாஜி, அக்பர் சிந்தா, மைதீன் கான்,ஆரியங்கா, செய்யது சுலைமான், பட்டத்தி,தகவல் தொழில்நுட்ப அணி ரெஜினா ,சக்தி சுப்பிர மணியன்,கீர்த்தி,அசன் கனி,அலி பக்ருதீன், மீன்கனி,அக்பர் சிந்தா உள்ளிட்ட மாநில,மாவட்ட,மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், பாக முகவர்கள்(BLA2),BLC உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள்,மூத்த முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் முத்துகிருஷ்ண ராஜா நன்றியுரையாற்றினார்.



விளாத்திகுளம் பேரூராட்சிக்குட்பட்ட,1 வது வார்டு,அம்பாள் நகரில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.10லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வுக் குழு தலைவர், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.வி. மார்கண்டேயன் திறந்து வைத்தார்கள்.உடன் விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் செந்தில்குமார், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் வேலுச்சாமி, விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து, விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன், கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதக்கண்ணன், புதூர் பேரூர் கழகச் செயலாளர் மருதுபாண்டியன், எட்டையாபுரம் பேரூர் கழக செயலாளர் பாரதி கணேசன், புதூர் பேரூராட்சி மன்ற தலைவர் வனிதா அழகுராஜ், பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இமானுவேல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், ராதாகிருஷ்ணன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் கேப்டன் கேசவன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இலக்கணம், இலக்கியம் உள்ள ஒரே மொழி நம் மொழி தான்!

# உலகத்தையே ஆளக்கூடிய சக்தி தமிழ்மொழிக்கு உள்ளது!

## திண்டுக்கல் வீரவணக்கநாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி பெருமிதம்!

*திண்டுக்கல், ஜன.27–*

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக் கூட்டம், திண்டுக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில் குமார் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். திண்டுக்கல் தெற்கு ஒன்றியச் செயலாளர் வெள்ளிமலை, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அஸ்வின்பிரபாகரன் ஆகியோர் வரவேற்றனர். துணை பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ. பெரியசாமி, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் கோவை திராவிட மணி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர்.



இதில் அமைச்சர் இ. பெரியசாமி பேசியதாவது: –

உலகில் உள்ள மொழிகளில் இலக்கணம், இலக்கியம் உள்ள ஒரே மொழி தமிழ் மொழி தான். உலகத்தையே ஆளக்கூடிய சக்தி தமிழ் மொழிக்கு உள்ளது.

பிரதமர் வீடு கட்டும் திட்டத்திற்கு ஒன்றிய அரசு ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் மட்டுமே வழங்குகிறது. மீதமுள்ள தொகையான ரூ.1 லட்சத்து 74ஆயிரத்தை தமிழக அரசு வழங்குகிறது. தமிழகம் முழுவதும் வேலைவாய்ப்பற்று இருந்தவர்களில் 20 லட்சம் பேருக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்பட்டுள்ளது. ஒன்றியத்தில் உள்ள மதவாத ஆட்சிக்கு முடிவு கட்டும் விதமாகவே இனி நமது போராட்டம் இருக்க வேண்டும். இந்தியாவில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும். அதற்கு நாம் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், தமிழ்மணி, கனகதுரை, மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன், பிலால் உசேன், மார்கிரேட் மேரி, மாவட்ட பொருளாளர் சத்திய மூர்த்தி, மாநகர செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், வடக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.அக்பர், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் துரைப் பாண்டி, பாஸ்கரன், பள்ளபட்டி ஊராட்சி முன்னாள் தலைவர் பரமன், ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய செயலாளர் ப.க.சிவகுரு சாமி, வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, ஆத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராமன், கொடைக்கானல் கீழ்மலை செயலாளர் வி.எம்.எ.கருமலைப் பாண்டி, பேரூர் கழக செயலாளர்கள் கன்னிவாடி இளங்கோவன், ஸ்ரீராமபுரம் ராஜா, சின்னாளபட்டி ஆ. மோகன்ராஜ், நிலக்கோட்டை ஜோசப் கோவில்பிள்ளை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேசன், மருத்துவ அணி அமைப்பாளர் அமிர்தகடேஸ்வரர், பொறியாளர் அணி எம்.செந்தில்குமரன், விளையாட்டு மேம்பாட்டு அணி பார்த்தசாரதி, விவசாய அணி இல.கண்ணன், மாநகர பகுதி செயலாளர்கள் ராஜேந்திரகுமார், பஜ்ருல்ஹக், கொடைக்கானல் நகர செயலாளர் முகமது இப்ராகிம், திண்டுக்கல் மாநகர பொருளாளர் சரவணன், இறுதியில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் சூசைராபர்ட் உட்பட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மாணவரணி நிர்வாகி கள் திரளாக கலந்து கொண்டனர்.

### காரைக்குடியில் சிவகங்கை மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டத்தில்

# கட்சிப் பணிகளை சிறப்பாக நிறைவேற்றிய ஒன்றிய - நகரச் செயலாளர்களுக்கு முதல்வர் பாராட்டு!

*சிவகங்கை, ஜன. 28-*

இம்மாதம் 21ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலையில் காரைக்குடி பி.எல்.பி. பேலஸ்மண்டபத்தில் கழக தலைவரும் முதல்வருமான தளபதி அவர்கள் தலைமையில் சிவகங்கை மாவட்ட கழக நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கட்சியின் வளர்ச்சி பணிகள் 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து முதல்வர் நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். நிர்வாகிகள் கூட்டத்தில் கட்சியின் பணிகளை சிறப்பாக நிறைவேற்றிய சிவகங்கை தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் 2024 நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணி கட்சி வேட்பாளருக்கு அதிக வாக்குகள் பெற்றுத் தந்த சிவகங்கை நகர் செயலாளர் சி.எம் துரை. ஆனந்த், தேவகோட்டை நகர் கழகச் செயலாளர் பெரி.பாலா புதுவயல் பேரூர் கழகச் செயலாளர் பகுருதீன் அலி பாய் ஆகியோரை கட்சிப் பணியினை சிறப்பாக மேற்கொண்டதற்காக பாராட்டினார்.

இதுபோல் அனைத்து நிர்வாகிகளும் கட்சி பணியாற்றிடுமாறு அறிவுறுத்தினார்.முன்னதாக மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியருப்பன் வரவேற்றார். நிர்வாகிகள் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் மு. தென்னவன், டாக்டர் , எஸ்.சுந்தர்ராஜ் ,திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. முன்னாள் எம்.எல். ஏக்கள் சுப .மதியரசன், எஸ் . மாரியப்பன் கென்னடி, சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் முன்னாள் எம்.எல்.ஏ கே. முருகவேல் , க.சண்முகம் கே. ஆர்.என்.போஸ், மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தா. ராமையா, அ.முகம் மது, மேயர் எஸ்.முத்து துரை, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, த.உதயகுமார், ஏ. ஆர். ஜெயமூர்த்தி, கு. ராசாங்கம், பி.ஆர்.பெருமாள், அம்பலமுத்து, தெய்வானை இளமாறன், கு.சிங்காரம், சிங்காரம் , கரு. அசோகன், பி.டி.ஆர். முத்து, ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் உட்பட 73 பேர் கலந்து கொண்டார்கள்.



சிங்கம்புணரியில் அண்ணா மன்றம் – கலைஞர் அறிவாலயம் கட்டிட துவக்க விழா கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஏற்பாட்டி நடைபெற்றது. ராம அருணகிரி, கணேசன், பூமிநாதன், அம்பலமுத்து சோமசுந்தரம், கதிர்வேல், சிவக்குமார் , இந்தியன் செந்தில் ஆகியோர் தலைமையும், ஆனந்த கிருஷ்ணன், புகழேந்தி, சிவபுரிசேகர், அலாவுதீன் உள்ளிட்டோர் முன்னிலையும் வகித்தனர். நிகழ்ச்சியில் தனுஷ்கோடி, செல்வகுமார், ஞானசேகரன், பூமிநாதன், குடேசன்மணி, பாஸ்கரன் செந்தில் கிருஷ்ணன், சுரேஷ், மெய்யப்பன், சரவணன், அலாவுதீன், ஜெயக்குமார், மீனா,மணி சேகரன்,சங்கர்,ஜெயசித்ரா தேவி,சத்யா,திவ்யா, மாடன் சையது, பார்த்திபன், கே. ஆர்.ஏ.கணேசன், எஸ்.வி.மங்கலம், சுப.மதியரசன், முரசொலி கார்த்திக், புவராஜ், அம்பலமுத்து,அருண்ராஜ்.அமுதன், மணி, உதயகுமார்,பொன் சரவணன், அழகுராஜா, தங்க குமரன், செல்வம்,கனகராஜ், சுரேஷ்,சசிகுமார், சாண்டில்யன், இளவரசன், சுந்தரபாண்டி, மணிகண்டன், , நாகேந்திரன்,கணேசமூர்த்தி, ஸ்டாலின் பிரபு,நவநீதன், அறிவு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.